DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 243/2024

Prosecution Witness - P.W. 18

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. சுப்புலெட்சுமி |
| Father's Name | : | பெருமாள் |
| Village | : | திருநெல்வேலி |
| Taluk | : | திருநெல்வேலி |
| Calling | : | காவல் ஆய்வாளர் |
| Age | : | 49 |
| Date | : | 26.02.2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.02.2026.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

26.02.2026

**முதல் விசாரணை:-**

நான் தற்போது தென்காசி மாவட்டம், தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு களியக்காவிளையில் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது பளுகல் காவல் நிலைய குற்ற எண். 94/2023 பிரிவு 302, 380 IPC வழக்கில் எனக்கு முன்னாள் ஆய்வாளர் திரு. காளியப்பன் அவர்கள் புலன் விசாரணை செய்து வந்தபோது அவர் பணி மாறுதலில் சென்றுவிட்டதால் 04.01.2024 அன்று இந்த வழக்கு கோப்பை

பார்வையிட்டு எனது விசாரணைக்கு எடுத்து கொண்டேன்.

இவ்வழக்கில் 04.01.2024 அன்று ஜெயராணி என்பவரை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். அவருடைய மகன் ஜெகன்ஜேம்ஸ் என்பவரையும் விசாரித்து அன்றையதினமே மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு இறந்தவரின் உடன் பிறந்த தம்பியான விஜய் என்பவரை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் சுந்தர்ராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தாமஸ் என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

05.01.2024 ஆம் தேதி தடய அறிவியல் துறை, உதவி இயக்குநர் மினிதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விஜயேந்திரன், சிறப்பு உதவி ஆய்வாளர், துப்பறியும் நாய் பிரிவு அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 05.01.2024 அன்று உடல் கூராய்வு அறிக்கை கிடைக்கப்பெற்றது. பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் ராஜேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

08.01.2024 ஆம் தேதி கிளாஸ்டின் ஜெயகுமார், தலைமை காவலர் 1656, அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கில் எனது விசாரணையிலிருந்து எதிரி செய்த குற்றம் உண்மை என தெரிய வந்ததால் பிரிவு 302, 380, 449, 392 இ.த.ச. விலிருந்து பிரிவு 302, 449, 392, 506(ii) இ.த.ச. வாக சட்ட மாறுதல் அறிக்கை தயார் செய்து அனுப்பி வைத்தேன். என்னிடம் காட்டப்படும் சட்ட மாறுதல் அறிக்கை நான் தயார் செய்ததுதான். **அது அ.சா.ஆ. 19 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

அன்றைய தினம் குருதியியல் அறிக்கை வழங்கிய திருநெல்வேலி, வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தின் அறிவியல் அலுவலர் தன்யா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

திருநெல்வேலி, வட்டார தடய அறிவியல் பகுப்பாய்வாளர் சுகந்தி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். என்னிடம் காட்டப்படுவது இந்த வழக்கு சம்பந்தமாக திருநெல்வேலி தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட அறிக்கைகள்தான். குருதியல் அறிக்கை **அ.சா.ஆ. 20 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் ஏற்கனவே அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள Toxology Report இந்த வழக்கு சம்பந்தமாக பெறப்பட்டதுதான்.

என்னிடம் காட்டப்பபடுவது மதுரை தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து இந்த வழக்கு சம்பந்தமாக பெறப்பட்ட அறிக்கைகள். **அவை அ.சா.ஆ. 21 மற்றும் 22 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதன்பிறகு பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் ராஜேஷ் ஒரு இறுதியறிக்கை கொடுத்தார். என்னிடம் காட்டப்படுவது அந்த இறுதியறிக்கைதான். அது ஏற்கனவே அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

இறுதியறிக்கை கொடுத்த டாக்டர் ராஜேஷ் ஐ 15.02.2024 அன்று மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு விசாரணை முடிந்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 302, 449, 392, 506(ii) இ.த.ச. வின் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-</u>

சாட்சி தாமஸ்ஸை நான் விசாரித்தபோது எதிரியின் கையில் இரத்தம்

இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். தாமஸ் பார்க்கும்போது எதிரி ஜேம்ஸ் இருந்ததாக சொல்லப்படும் வீடு இருக்கும் முடுக்கு பாதை வழியாக வந்து கொண்டிருந்ததை பார்த்ததாக சொல்லவில்லை என்றால் அவ்வாறு சொல்லவில்லை. தெற்றிக்குழி பார்த்து வேகமாக நடந்து சென்று கொண்டிருந்தான் என சொன்னார். எதிரி என்ன நிறம் மற்றும் என்ன வகை உடை அணிந்திருந்தார் என்ற விவரத்தை தாமஸ் என்னுடைய விசாரணையின்போது சொல்லவில்லை என்றால் சரிதான். தாமஸ் பரக்குன்று திரு இருதய ஆலயத்தில் முக்கியமான பொறுப்பில் இருந்து வந்தார் என்ற விவரம் என்னுடைய விசாரணையில் தெரியவந்ததா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் அந்த திருஇருதய ஆலயத்தில் ஆராதனை நடந்து கொண்டிருந்த விவரம் என்னுடைய விசாரணையில் தெரிய வந்ததா என்றால் தெரிய வந்தது. தாமஸ் அன்றைய தினம் அந்த ஆராதனையில் பங்கு கொண்டிருந்த விவரத்தை என்னுடைய விசாரணையின்போது சொல்லவில்லை என்றால் சரிதான்.

என்னுடைய விசாரணையின்போது எதிரி எடுத்து சுழற்றியதாக சொல்லப்படும் கம்பியின் நீளம், விட்டம் ஆகியவை சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அந்த கம்பியை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அந்த கம்பியை எதிரி எந்த இடத்திலிருந்து எடுத்தார் என்ற விவரமும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. ரோட்டின் அருகில் கிடந்த கம்பியை எடுத்து சுற்றியதாக தாமஸ் கூறியுள்ளார். எந்த ரோட்டின் எந்த ஓரத்தில் கிடந்த கம்பியை எடுத்து சுற்றியதாக கூறியுள்ளாரா என்றால் தெற்றுக்குழி செல்லும்

ரோட்டில் வேகமாக நடந்து போகும்போது அருகில் கிடந்த கம்பியை எடுத்து சுற்றியதாக தாமஸ் கூறியுள்ளார். அந்த ரோட்டில் எந்த இடத்திலிருந்து கம்பியை எடுத்ததாக சொல்லியுள்ளாரா என்றால் குறிப்பிட்டு சொல்லவில்லை. அநாமத்தாக கிடந்த கம்பி என்றோ எந்த ஒரு காரணத்திற்காகவோ வைக்கப்பட்டிருந்த கம்பி என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. அப்படி ஒரு கம்பியும் கிடையாது என்றாலும் நான் சொல்வது போல கம்பியை எடுத்து வீசியதாக சொல்வதும் பொய் என்றாலும் அதனால்தான் எந்த ஒரு சாட்சியும் அது குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்லியுள்ள கம்பியை தவிர எதிரி எந்த ஒரு பொருட்களையும் எடுத்து சென்றதாக தாமஸ் என்னுடைய விசாரணையின்போது சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியை தடுப்பு காவலில் வைக்க பரிந்துரை செய்தேனா என்றால் ஆமாம். எதிரியை தடுப்பு காவலில் வைக்க பரிந்துரைப்பதற்காகதான் தாமஸ் என்ற சாட்சியை உருவாக்கி இந்த சம்பவத்தை கற்பனையாக உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த பகுதியில் அன்றைய தினம் திறந்திருந்த எந்த ஒரு கடைக்காரரையும், நான் விசாரணை செய்யவில்லை என்றால் சுந்தர்ராஜ் என்பவரை விசாரித்துள்ளேன். சுந்தர்ராஜ் அவருடைய கடையில் அந்த சமயத்தில் நான் கடையில் இருந்ததாக வாக்குமூலம் அளித்துள்ளாரா என்றால் வாக்குமூலம் அளித்துள்ளார். எந்த ஒரு நபரும் அவர்களுடைய பணி நேரத்தில் பணியிலிருந்தபோது பார்த்ததாக சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல.

துப்பறியும் நாய்பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளர் விஜயேந்திரன்

தன்னுடைய வாக்குமூலத்தில் தனிப்பிரிவிலிருந்து கிடைத்த தகவலின்பேரில் சம்பவம் இடத்திற்கு வந்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். சிறப்பு புலனாய்வு பிரிவிலிருந்து வரும் அனைவரும் அவர்களின் தனிப்பிரிவிலிருந்து வரும் தகவலின்பேரில்தான் சம்பவ இடம் வருவார்கள் என்றால் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின்பேரில் தனிபிரிவுக்கு சொல்லி, தனிப்பிரிவிலிருந்து அவர்களுக்கு தகவல் சொல்லி வருவார்கள். துப்பறியும் நாய் பிரிவு சிறப்புஉதவி ஆய்வாளர் விஜயேந்திரனை தவிர வேறு யாரும் தனிப்பிரிவிலின் தகவலின்பேரில் சம்பவ இடம் வரவில்லை என்றால் சரிதான். தடய அறிவியல் ஆய்வக அலுவலர் மினிதாவும், துப்பறியும் நாய் பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளர் விஜயேந்திரனும் மாலை 6.00 மணிக்குதான் சம்பவ இடம் வந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, மினிதா மாலை 5.50 மணிக்கும், விஜயேந்திரன் மாலை 6.00 மணிக்கும் வந்துள்ளார்கள். அந்த மினிதா மாலை 5.50 மணியிலிருந்து எத்தனை மணி வரையில் சம்பவ இடத்தில் சோதனைகளை மேற்கொண்டார் என்றால் 10 நிமிடத்தில் பார்த்து இரத்தம் மாதிரியை பஞ்சில் தோய்த்து எடுத்துக் கொடுத்தார். அவர் எத்தனை இடத்திலிருந்து இரத்த மாதிரி எடுத்தார் என்றால் சம்பவ நடந்த அறையிலும், சம்பவ நடந்த அறைக்கு பக்கத்து அறையிலும் காணப்பட்ட இரத்தத்தின் மாதிரிகளை சேகரித்து கொடுத்தார்.

இந்த வழக்கில் கைரேகை நிபுணர்கள் உதவி ஆய்வாளர் ஜவஹர் மற்றும் அமலாவை விசாரித்தேனா என்றால் இல்லை. கை நிபுணர்கள் பற்றிய எந்த விவரமும் இந்த வழக்கு கோப்பில் இல்லையா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் ஆய்வு

செய்து கைரேகை நிபுணர்கள் சேகரித்த கைரேகைகளும், எதிரியின் கைரேகையும் ஒத்து போகாததால் அந்த விஷயத்தை மறைத்துவிட்டோம் என்றால் சரியல்ல.

தலைமை காவலர் கிளாஸ்டின் ஜெயகுமார், குழித்துறை அரசு மருத்துவமனையில் களியக்காவிளை வட்ட காவல் ஆய்வாளர் 27.11.2023 அன்று காலை 7.00 மணி முதல் 9.00 மணி வரையில் பிரேத விசாரணை செய்ததாக என்னுடைய விசாரணையில் கூறியுள்ளார்கள்என்றால் சரிதான்.

இந்த வழக்கு சம்பந்தமாக சேகரிக்கப்பட்டதாக சொல்லப்படும் தடயங்கள் மற்றும் பகுப்பாய்விற்கு சேகரிக்கப்பட்ட தடயங்களை திருநெல்வேலி தடய அறிவியல் ஆய்வகத்திற்கு பல நாட்களில் எடுத்துச் சென்றதாக அதே தலைமை காவலர் கிளாஸ்டின் ஜெயகுமார் என்பவரைதான் சாட்சியாக சேர்த்துள்ளோம் என்றால் சரிதான்.

அவரை நான் விசாரித்து 08.01.2024 அன்று வாக்குமூலம் பதிவு செய்ததாக கூறுகிறேன் என்றால் சரிதான். ஆனால் அதே வாக்குமூலத்தில் 12.01.2024 அன்றும் தடயங்களை திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அவர் கொண்டு சென்றதாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் இந்த வழக்கில் எந்த விசாரணையும் செய்யவில்லை என்றாலும் நான் காவல் நிலையத்தில் தயார் செய்து வைத்திருந்த ஆவணங்களில் படித்து கூட பார்க்காமல் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இறந்து போன நபரை குழித்துறை அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றவுடன் அங்கே அவரை பார்த்து

பரிசோதனை செய்து அவர் இறந்துவிட்டார் என அறிவித்த மருத்துவரை நான் விசாரிக்கவும் இல்லை, அவரை நான் சாட்சியாக சேர்க்கவும் இல்லை என்றால் சரிதான்.

நான் முறையாக விசாரணை செய்யாமல் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் நான் எந்த சாட்சியையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கு சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.